# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064802

1. District : மாவட்டம் Tirunelveli PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 11/2019 Date: நாள் 26.07.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 24.07.2019 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14.30 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.07.2019 Time : நேரம் 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் AE, TANGEDCO, T.Kallikulam 50 Km South East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் HARICHANDRAN (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.DURAISAMY
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 17.04.1948 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Former (g) Address : முகவரி 1/46 North Street, Soundrapandiapuram Radhapuram Taluk.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Mohankumar, Assistant Engineer, TANGEDCO, Therkku Kallikulam, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 26.07.2019-ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.D.அரிச்சந்திரன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தெற்கு கள்ளிகுளம் மின்வாரிய உதவி பொறியாளர் திரு.மோகன்குமார் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 26.07.2019-ம் தேதி 09.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2019 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர், D.அரிச்சந்திரன், த/பெ துரைச்சாமி நாடார், 1/46, வடக்குத் தெரு, சௌந்திரபாண்டியபுரம், இராதாபுரம் தாலுகா. பெறுனர் உயர்திரு. ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது மகன் பெயர் காட்வின் பொன்குமார். அவன் பால் வியாபாரம் மற்றும் கடை வைத்து நடத்திவருகிறான். இராதாபுரம் வட்டம் சௌந்திரபாண்டியபுரம் கிராம புல எண் 150/41-ல் எனது மகன் காட்வின் பொன்குமார் பெயரில் 3 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அந்த நிலத்தில் விவசாய பணியை நான்தான்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

D. Harichandran
26/7/2019

26/7/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. SALVAN THURAI
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
V&AC, Tirunelveli

கவனித்து வருகிறேன். அந்த நிலத்திற்கு எனது மகன் பெயரில் புதிய TF III A1ன்படி விவசாய மின் இணைப்பு பெற 14.07.2017-ல் வள்ளியூர் செயற்பொறியாளர் அலுவலகத்தில் நான் மனு கொடுத்தேன். பின்பு 22.07.2017-ல் கட்டணம் ரூ.50/- (வரிசை எண் E 0393136) செலுத்தினேன். உதவி பொறியாளர் அறிவுறுத்தலின்பேரில் மேற்படி கட்டணத்தை ரத்து செய்து மீண்டும் மின் இணைப்பு புதிதாக மனு கொடுத்து கட்டணம் செலுத்த சொன்னார். நானும் அதற்கான கட்டண தொகை ரூ.59/- (வரிசை எண் E 1405113)ன்படி 04.01.2019ல் செலுத்தினேன். அதன் பின்னர் கள்ளிகுளம் உதவி பொறியாளர் கள ஆய்வின்போது கும்பிளம்பாடு மின்மாற்றி 1Uல் இருந்து 11KV பிறருடைய பட்டா நிலத்தின் வழியாக அமைக்க வேண்டியுள்ளது என்றும், அதற்கான சம்மதக்கடிதம் பெற்று அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு நான் பதில் மனு அனுப்பும்போது பிறருடைய பட்டா நிலத்தில் அமைக்க வேண்டாம் என்றும், கும்பிளம்பாடு மின்மாற்றியிலிருந்து சௌந்திரபாண்டியபுரம் ரோடு வழியாக எனது தோட்டத்திற்கு கிழக்கு பக்கம் அரசு பொதுப்பாதை உள்ளது என்றும் தெரிவித்திருந்தேன். பின்பு உதவி பொறியாளர் என்னை அழைத்து மின் இணைப்பு பெறுவதற்கு மீண்டும் புதிதாக கட்டணம் செலுத்த சொன்னார். நானும் அதற்கான கட்டண தொகை ரூ.59/- (வரிசை எண் E 1826247)ன்படி 22.02.2019ல் செலுத்தினேன். பின்பு உதவி பொறியாளர் என்னை அழைத்து எனது விவசாய நிலத்திற்கான வரைபடம் மற்றும் அதற்கு பொதுப்பாதை உள்ளது என கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று வாங்கி கொடுக்க சொன்னார்கள். அதன்படி நானும் வாங்கி கொடுத்தேன். பின்பு உதவி பொறியாளர் என்னை அழைத்து உங்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான தொகையை செலுத்தும்படி கூறினார். அதன்படி நான் கடந்த 10.05.2019ம் தேதி வரிசை எண் E 1836844-ன்படி ரூ.1,609/- செலுத்தினேன். பின்பு மின் கம்பங்கள் நாட்டி மின் இணைப்பு தரும்படி அவரை பலமுறை சென்று பார்த்தேன். ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி நாட்களை கடத்தி வந்தார். கடைசியாக 24.07.2019 அன்று மதியம் சுமார் 02.30 மணியளவில் உதவி பொறியாளர் திரு.மோகன் குமார் அவர்களை தெற்கு கள்ளிகுளத்தில் உள்ள அவரது அலுவலத்தில் வைத்து சந்தித்தபோது மேற்படி எனது மகன் பெயரில் உள்ள விவசாய நிலத்திற்கு புதிய மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால் தனக்கு ரூ.20,000/- தந்தால்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னார். தற்போது பணம் என்னிடம் இல்லை. நான் ரொம்ப கஷ்டத்தில் உள்ளேன் அதனால் என்னால் பணம் தர இயலாது என்று சொன்னேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் தந்தால்தான் புதிய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்று சொன்னார். தற்போது பணம் என்னிடம் இல்லை கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு ரூ.10,000/- நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை கொண்டு வந்து தரும்படி கூறினார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். சட்டப்படியாக செய்ய வேண்டிய அரசு பணிக்கு உதவி பொறியாளர் லஞ்சமாக ரூபாய் 10,000/- கேட்கிறார் என்று எனது மனம் கஷ்டப்பட்டது. உதவி பொறியாளர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே இன்று 26.07.2019 தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். உதவி பொறியாளர் திரு.மோகன்குமார் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/- கொண்டு வந்துள்ளேன். நான் மின் இணைப்பு பெறுவதற்காக பணம் கட்டிய ரசீதுகள் நான்கையும் இணைத்துள்ளேன். ஐயா, என்னிடம் புதிய மின் இணைப்பு கொடுக்க லஞ்சம் கேட்ட உதவி பொறியாளர் திரு.மோகன்குமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நாள்: 26.07.2019 இப்படிக்கு, ஒம்.அரிச்சந்திரன். 26/7/2019.

Sir, Received the complaint on 26.07.2019 at 09.00 hrs. and conducted confidential enquiry. I registered a case in Tirunelveli V&AC Cr.No.11/2019 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 26.07.2019 at 09.30 hrs. sd.C.SALVANTHURAI, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

26/7/19
(C.SALVANTHURAI)
Inspector of Police,
V&AC,
Tirunelveli.